| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| MSSRF<br>Science for Sustainable Development | மாவட்டம் : | மதுரை | காலம் : | 26/06/2024 | முதல் | 30/06/2024 |
| | அறிக்கை எண் : | 051/ 2024 | வெளியீட்டு நாள் : | 25/06/2024 | | |

## மதுரை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 35°-39° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°-27° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| கடந்தவார வானிலை (20.06.2024 முதல் 24.06.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 30-06-2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 20/06 | 21/06 | 22/06 | 23/06 | 24/06 | தேதி | நாள்-1 26/06 | நாள்-2 27/06 | நாள்-3 28/06 | நாள்-4 29/06 | நாள்-5 30/06 |
| 0.5 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 3 | 3 | 5 | 3 | 0 |
| 37 | 38 | 35 | 39 | 37 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 37 | 36 | 35 | 34 | 33 |
| 26 | 25 | 25 | 27 | 27 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 27 | 26 | 25 | 25 | 24 |
| 6 | 6 | 6 | 6 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 6 | 8 | 8 | 5 |
| 70 | 65 | 64 | 61 | 64 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 80 | 70 | 70 |
| 52 | 56 | 55 | 60 | 57 | | 70 | 60 | 50 | 50 | 40 |
| 4 | 10 | 8 | 8 | 19 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 10 | 12 | 8 | 10 | 10 |
| மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | காற்றின் திசை | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | தென் மேற்கு |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூன் 26, 27, 28 மற்றும் 29 தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 33°-37° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 24°-27° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 8 முதல் 12 கி.மீ வேகத்தில், , மேற்கு மற்றும் தென்மேற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

### அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு(28ஜூன்-04 ஜூலை 2024):

### மழைப்பொழிவு :

28-06-2024 - 04-07-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் பொதுவாக இயல்பானது முதல் முதல் இயல்பை விட சற்று கூடுதலான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

### அதிகபட்ச வெப்பநிலை :

முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 26° செல்சியஸ் முதல் 32° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**குறைந்தபட்ச வெப்பநிலை :**
28-06-2024 - 04-7-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 20° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**விவசாயம் :**
கடந்த சில நாட்களாக ஓரளவு மழைப் பொழிவு பெறப்பட்டுள்ளதாலும், அடுத்த சில நாட்களுக்கு மழை எதிர்பார்க்கப்படுவதாலும் விவசாயிகள் உழவு செய்தல் மற்றும் நிலம் தயாரித்தல் வேலைகளுக்கு திட்டமிடலாம்.

மேலும் விவசாயிகள் துரிதமாக செயல்பட்டு நீர் வரத்து வாய்க்கால்கள், பண்ணைக் குட்டைகள் மற்றும் நீர் நிலைகளை சரி செய்து மழை நீர் சேகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மருந்து தெளிக்கும் வேலைகளை சிறிது காலத்திற்கு ஒத்தி வைக்கவும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : கத்திரி, மல்லிகை, கால்நடை.**

**கத்திரி:**
கத்திரி பயிரில் சிற்றிலை நோய் தாக்குதல் பரவலாக தென்படக்கூடும்.

இவற்றின் தாக்குதலால் கத்தரிச் செடியின் இலைகள் சிறுத்தும், இலைக் காம்புகள் நீளம் குறைந்தும் காணப்படும்.

அளவுக்கு அதிகமான இலைகள், செடியின் நுனிக் குருத்தில் தோன்றி வளர்ச்சிக் குன்றிய செடியாக தோற்றமளிக்கும். மலர்கள் இலை போன்ற அமைப்பாக மாறிவிடும், காய்கள் காய்ப்பது அரிதாகிவிடும்.

பாதிக்கப்பட்ட செடிகளை அகற்றி அழிக்க வேண்டும்.

இதனை கட்டுப்படுத்த 6 மி.லி. இமிடாக்ளோபிரைடை 10 லிட்டர் தண்ணீருக்கு 10 மில்லி ஒட்டுபசையுடன் கலந்து இலைவழியாக தெளிக்க வேண்டும்.

**மல்லிகை:**
மல்லிகை பூப்பயிரில் தண்டு மற்றும் வேர் அழுகல் நோய்த் தாக்குதல் பரவலாக தென்படலாம். இந்நோய் தாக்குதலின் அறிகுறியாக தாவரங்களின் எல்லா நிலைகளிலும் தொற்று ஏற்படும்.

முதலில் முதிர்ந்த இலைகள் மஞ்சள் நிறமாக மாறும் பின் இளம் இலைகள் மஞ்சளாகும். இறுதியில் தாவரம் இறந்துவிடும். மேலும் வேர் பகுதியில் கருப்பு நிறமாற்றம் தென்படும்.

இதனைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2½ கிராம் என்ற அளவில் காப்பர் ஆக்ஸிகுளோரைடு மருந்தினைக் கலந்து செடியின் தூர்பகுதியில் ஊற்ற வேண்டும்.

**கால்நடை:**

கால்நடைகளைத் தாக்கும் தொண்டை அடைப்பான் நோயானது பெரும்பாலும் மழைக் காலங்களிலேயே மிகுதியாக காணப்படுகிறது. கறவை மாடுகள் குறிப்பாக எருமை மாடுகள், கலப்பினப் பசுக்கள் இந்நோயால் அதிகம் பாதிக்கப்படுகின்றன.

இந்நோய் தாக்கிய கால்நடைகளுக்கு கடுமையான காய்ச்சல் ஏற்படுவதுடன தலை, கழுத்து, தொண்டை, மார்பு போன்ற பகுதிகளில் வீக்கமும் ஏற்படும்.

இந்த நோயின் கிருமிகள் ஈரப்பதமான மற்றும் நீர் நிறைந்த நிலைமைகளில் நீண்ட காலம் உயிர்வாழும்.

இதனை தவிர்க்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மழைக் காலத்திற்கு முன்பே அருகில் உள்ள கால்நடை மருத்துவரை அணுகி மாடுகளுக்கு தடுப்பூசி போடுவது அவசியம் ஆகும்.